## DEPOSITION OF WITNESS

**In the Court of District Munsif cum Judicial Magistrate , Srirangam**

**CC.91/2019**

**PW-9**

**Date :-17.03.2026**

| | | | |
|---|---|---|---|
| Name | திரு.சக்திவேல் | Caste | |
| த/பெ. | திரு. ராமசாமி | Calling | டெய்லர் |
| Village | எஸ்.புதுக்கோட்டை | Religion | |
| Taluk | ஸ்ரீரங்கம் | Age | 36/2026 |

அரசு தரப்பு முதல் விசாரணை-

நான் தற்போது எஸ் .புதுக்கோட்டையில் வசித்து வந்து டெய்லர் வேலை செய்து வருகிறேன் . என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 1 வது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான் . கடந்த 01.02.2015 அன்று காலை 07.30 மணியளவில் சிறுகமணி பேருந்து நிலையம் அருகில் விபத்து நடந்ததாக சொல்லி பெட்டவாயத்தலை போலீசார் வரைபடம் வரைந்து என்னிடம் காண்பித்தார்கள் அப்போது என்னிடம் சாட்சி கையொப்பம் பெற்றார்கள் . அப்போது என்னுடன் சேர்ந்து மற்றொரு நபரும் கையொப்பம் செய்தார் அவரது பெயர் எனக்கு தற்போது ஞாபகம் இல்லை. **அந்த பார்வை மகஜர் ஆவணம் அ .சா.ஆ.2 ஆக குறியிடு செய்யப்படுகிறது.**போலீசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–

எனது அப்பா பெயர் பெரியசாமி என்று சொன்னால் தவறு என்றால் ராமசாமி. மெயின்ரோடு சிறுகமணி முகவரி என்று சொன்னால் எனது கதவு எண்.71 புதுக்கோட்டை கிராமம் என்று சொல்வார்கள். திருச்சி கரூர் ரோட்டிலிருந்து 1 ½ கிலோமீட்டர் எனது வீட்டுக்கு செல்லவேண்டும் என்றால் 2 கிலோமீட்டர் வரும். திருச்சி மெயின்ரோடு என்று சொன்னால் அது தவறு . வழக்கமாக பார்வை மகஜரில் கண்டுள்ள கையெழுத்தை நான் எங்கும் செய்வதில்லை என்றால் சரிதான் . நான் வழக்கமாக தமிழ்தான் செய்வேன். வழக்கமாக R என்றுதான் initial செய்வேன் என்றால் சரிதான். P என்று initial செய்திருந்தால் அது தவறு . நான் சம்பவ இடத்திற்கு செல்லவில்லை என்றால் சரியல்ல . காவல்துறை

**கேட்டுக்கொண்டதற்கினங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.**

Sd/-xxxxx
Taken down by me in open court , read over to his and accepted by him as correct and made his signature

Sd/-K.Vijai Rajesh.,
District Munsif – Cum - Judicial Magistrate,
Srirangam.

## DEPOSITION OF WITNESS

**In the Court of District Munsif cum Judicial Magistrate , Srirangam**

**CC.91/2019**

**PW-8**

**Date :-17.03.2026**

| | | | |
|---|---|---|---|
| Name | திரு.ராஜலிங்கம் | Caste | |
| த/பெ. | திரு. மலையாண்டி | Calling | விவசாயம் |
| Village | எஸ்.புதுக்கோட்டை | Religion | |
| Taluk | ஸ்ரீரங்கம் | Age | 55/2026 |

**அரசு தரப்பு முதல் விசாரணை-**

**நான் தற்போது எஸ் .புதுக்கோட்டையில் வசித்து வந்து விவசாய வேலை செய்து வருகிறேன் .கடந்த** 31.01.2015 **அன்று நான் திருச்சியிலிருந்து பெட்டவாய்த்தலை செல்வதற்காக டவுன் பஸ்சில் ஏறி பயணம் செய்தபோது சிறுகமணி பேருந்து நிறுத்ததில் இரவு** 10.15 **மணியளவில் சாலையின் இடது ஓரமாக நான் சென்ற பேருந்து பயணிகளை இறக்கிவிட்டுக்கொண்டிருந்தபோது திருச்சியிலிருந்து கோயம்புத்தூர் செல்லும் அரசு பேருந்து வேகமாக வந்து தென்புறம் இருந்து வடபுறம் நோக்கி செல்லும்போது எங்கள் பேருந்தின் பின்பக்கம் வலதுபுறத்தில் அந்த பேருந்தின் இடதுபுறம் மோதி விபத்து ஏற்பட்டது . அந்த விபத்தில் நான் அந்த பேருந்தின் நடுபகுதியில் பயணம் செய்ததால் எனக்கு காயம் ஏற்படவில்லை . அந்த விபத்தில் எங்கள் பேருந்தில் பயணம் செய்த ஜெயபிரகாஷ் என்ற நபர் அதே இடத்தில் இறந்துவிட்டார் . விபத்து ஏற்படுத்திய பேருந்தை ஓட்டிய நபர் ஆஜர் எதிரிதான் . போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.**

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை-**

**நான் ஜெயபிரகாஷ் உறவினர் என்றால் சரியல்ல ஒரே ஊர்தான் . நான் பயணம் செய்த பயணசீட்டை , காவல்துறை விசாரணையில் கொடுக்கவில்லை என்றால் சரிதான் . நான் அந்த பேருந்தில் பயணம் செய்ததற்கான வேறு ஆதாரம் காவல்துறையிடம் கொடுக்கவில்லை என்றால் சரிதான் . நான் அந்த பேருந்தில் பயணம் செய்யவில்லை ஜெயபிரகாஷ் எனது ஊர்காரர் என்பதால் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல . எதிரியின் அடையாளத்தை காவல்துறை சொல்லி தெரிந்துக்கொண்டேன் என்றால் சரியல்ல . வேறு யாருக்கு அடிப்பட்டது**

**என்ற பெயர் விவரம், ஊர் விபரம் தெரியாது என்றால் சரிதான் . பின்னால் வந்த பேருந்தின் விவரத்தை காவல்துறை சொல்லி தெரிந்துக்கொண்டேன் என்றால் சரிதான்.**

Sd/-xxxxx

Taken down by me in open court , read over to his and accepted by him as correct and made his signature

Sd/-K.Vijai Rajesh.,
District Munsif – Cum - Judicial Magistrate,
Srirangam.

## DEPOSITION OF WITNESS

**In the Court of District Munsif cum Judicial Magistrate , Srirangam**

**CC.91/2019**

**PW-7**

**Date :-17.03.2026**

| | | | |
|---|---|---|---|
| Name | திரு.ராதா | Caste | |
| த/பெ. | திரு. ஜெகன்நாதன் | Calling | வீட்டுக்குடித்தனம் |
| Village | தேனி | Religion | |
| Taluk | பெரியகுளம் | Age | 28/2026 |

**அரசு தரப்பு முதல் விசாரணை-**

**நான் தற்போது தேனி பெரியகுளத்தில் வசித்து வந்து வீட்டுக்குடித்தனம் நடத்தி வருகிறேன் . கடந்த 31.01.2015 அன்று இரவு 10.15 மணியளவில் திருச்சி சத்திரம் பேருந்து நிலையத்தில் டவுன் பஸ்சில் ஏறி பெட்டவாய்த்தலை செல்வதற்காக பயணம் செய்தேன் . இரவு 10.15 மணியளவில் சிறுகமணி பேருந்து நிறுத்ததில் பயணிகளை இறக்கிவிடுவதற்காக சாலையின் இடது ஓரமாக நின்று பயணிகள் இறக்கிவிட்டுக்கொண்டிருந்தபோது திருச்சியில் இருந்து வந்த அரசு பேருந்து வேகமாகவும், கவனக்குறைவாகவும் அதன் ஓட்டுநர் ஓட்டிவந்து நாங்கள் பயணம் செய்த பேருந்தின் பின்னால் வலது பக்கம் அந்த பேருந்தின் இடதுபுறம் மோதி விபத்து ஏற்பட்டது . அந்த விபத்தில் எங்கள் பேருந்தின் கடைசி இருக்கையில் அமர்ந்திருந்த ஜெயபிரகாஷ் என்பவர் அதே இடத்தில் இறந்துவிட்டார் . விபத்து ஏற்படுத்திய பேருந்தை ஓட்டிய நபர் ஆஜர் எதிரிதான் . அந்த விபத்தில் நான் பேருந்தின் முன்னால் பயணம் செய்ததால் கீழே விழுந்துவிட்டேன் ஆனால் காயம் எதுவும் எனக்கு ஏற்படவில்லை. போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.**

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை-**

**நான் பெண்கள் வரிசையில் எத்தனையாவது சீட்டில் உட்கார்ந்து இருந்தேன் என்றால் இடது பக்கம் நான்காவது , ஐந்தாவது சீட்டில் அமர்ரந்திருப்பேன். நான் பயணம் செய்த பயணசீட்டை காவல்துறையில் ஒப்படைத்தேனா என்றால் ஞாபகம் இல்லை . நான் பேருந்து செல்லும் திசையில் மேற்கு நோக்கி அமர்ந்திருந்தேன் என்றால் சரிதான். பின்னால் வந்த பேருந்து வேகமாக வந்ததை நான் பார்க்கவில்லை என்றால் நான் பார்த்தேன். நான் பயணம் செய்த இருட்டான நேரம் என்றால் சரிதான் .**

எங்கள் பேருந்து வடபுறம் எவ்வளவு அடி தள்ளி நின்றது என்றால் அடி கணக்கு எனக்கு தெரியாது . வெள்ளை கோட்டை தள்ளிதான் நின்றுக்கொண்டிருந்தது. நான் விழுந்தபோது வேகமாக விழுந்துவிட்டேன் என்றால் சரிதான் . நான் சொல்லுவதபோல் வேகமாக விழுந்திருந்தால் எனக்கு அடிப்பட்டிருக்கும் நான் அந்த பேருந்தில் பயணம் செய்யததாதால் எனக்கு அடிப்படவில்லை என்றால் சரியல்ல . இறந்துபோனவர் எனது உறவினர் இல்லை என்றால் சரிதான் . விபத்து ஏற்படுத்திய பேருந்தை ஓட்டியவர் ஆஜர் எதிரிதான் என்று காவல்துறை சொல்லி தெரிந்துக்கொண்டேன் என்றால் சரியல்ல நான் பார்த்தேன் . நான் பேருந்தில் பயணம் செய்யவில்லை . காவல்துறை கேட்டுக்கொண்டதற்கினங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Sd/-xxxxx

Taken down by me in open court , read over to his and accepted by him as correct and made his signature

Sd/-K.Vijai Rajesh.,
District Munsif – Cum - Judicial Magistrate,
Srirangam.

## DEPOSITION OF WITNESS

**In the Court of District Munsif cum Judicial Magistrate , Srirangam**

**CC.91/2019**

**PW-6**

**Date :-17.03.2026**

| | | | |
|---|---|---|---|
| Name | திரு.தங்கராஜ் | Caste | |
| த/பெ. | திரு. காளிமுத்து | Calling | விவசாயம் |
| Village | சிறுகமணி வள்ளுவர் நகர் | Religion | |
| Taluk | ஸ்ரீரங்கம் | Age | 63/2026 |

அரசு தரப்பு முதல் விசாரணை-

நான் தற்போது சிறுகமணி வள்ளுவர் நகரில் வசித்து வந்து விவசாய வேலை செய்து வருகிறேன். கடந்த 31.01.2015 அன்று திருச்சியிலிருந்து வள்ளுவர் நகர் இறங்குவதற்காக டவுன் பஸ்சில் சத்திரம்பேருந்துட நிலையத்தில் ஏறி பயணம் செய்தபோது பேருந்து சிறுகமணி பேருந்து நிறுத்ததில் பயணிகளை இறக்கிகொண்டிருந்தபோது நான் பேருந்தின் வலது பக்கத்தில் உட்கார்ந்து பயணம் செய்தேன் . அப்போது அந்த பேருந்து நிறுத்ததில் பேருந்தை இடது ஓரமாக நிறுத்தி பயணிகளை இறக்கிக்கொண்டு இருந்தார்கள் . அப்போது திருச்சியில் இருந்து கோயம்புத்தூர் நோக்கி சென்றுக்கொண்டிருந்த பேருந்து எதிரில் வந்த பேருந்தை தாண்டி செல்லும்போது வேகமாக வந்து எங்கள் பேருந்தின் பின்பக்க வலது பக்கம் மோதி விபத்து ஏற்பட்டது . அந்த விபத்தில் எனது வலது கால் முட்டியிலும் , வலது தோள்பட்டையிலும், தலையிலும் காயம் ஏற்பட்டது. அந்த விபத்தில் எங்க ஊரை சேர்ந்த மற்ற இரண்டு நபர்களுக்கும் காயம் ஏற்பட்டது . அதே விபத்தில் காயம்பட்ட எஸ்.புதுக்கோட்டையை சேர்ந்த ஒரு நபர் இறந்துவிட்டார். அந்த விபத்தை ஏற்படுத்திய பேருந்தை ஓட்டிய நபரை எனக்கு காயம் ஏற்பட்டதால் பார்க்கவில்லை. அதில் எனக்கு ஏற்பட்ட காயத்திற்கு திருச்சி தனியார் மருத்துவமனைக்கு முதலுதவி சிகிச்சை பெற்று மேல் சிகிச்சைகாக திருச்சி அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்ந்தேன் . போலீசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை-

நான் முதல் விசாரணையில் சொன்ன விவரத்தைதான் காவல் துறையில் விசாரணை செய்தபோது சொன்னேன் . நான் பயணம் செய்த பேருந்து பேருந்து நிறுத்ததில் நிற்பதற்கு முன்பு சிக்னல் செய்தார்களா என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் தெரியாது . நான் பயணம் செய்தபேருந்து பேருந்து நிறுத்ததிற்கு தாண்டி நின்றது என்றால் சரிதான். நான் பயணம் செய்த நேரம் இருட்டு என்றால் சரிதான் . நான் பயணம் செய்த பேருந்து பேருந்து நிலையத்தில் இருந்து 10 அடி வடபுறம் தாண்டி நின்றது என்றால் சரிதான் . நான் பயணம் செய்த பேருந்து தென்புறம் ஒட்டி நின்றிருந்தால் விபத்து ஏற்பட வாய்ப்பில்லை என்றால் தென்புறம்தான் ஒட்டி நின்றது. நான் மேற்கு நோக்கி அமர்ந்திருந்ததால் கிழக்கிலிருந்து வந்த வண்டி எவ்வாறு வந்தது என்று தெரியாது என்றால் சரிதான். விபத்துஎவ்வாறு ஏற்பட்டது என்னு அங்கு உள்ளவர்வர்கள் பேசிக்ெொகொண்டார்கள் என்றால் சரிதான் . அங்கு உள்ளவர்கள் பேசிக்கொண்டதை வைத்து விபத்தை தெரிந்துக்கொண்டேன் என்றால் சரிதான். அந்த விபத்திற்கு நான் பயணம் செய்த பேருந்தின் ஓட்டுநர் காரணம் என்றால் இருக்கலாம். நஷ்ட ஈடு பெறுவதற்காக நான் பயணம் செய்த பேருந்து ஓட்டுநர் மீது புகார் அளிக்கவில்லை என்றால் சரியல்ல.

Sd/-xxxxx

Taken down by me in open court , read over to his and accepted by him as correct and made his signature

Sd/-K.Vijai Rajesh.,
District Munsif – Cum - Judicial Magistrate,
Srirangam.